# TAMIL

## ( COMPULSORY )

*Time allowed : **Three Hours***

*Maximum Marks : **300***

---

### Question Paper Specific Instructions

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*All questions are to be attempted.*

*The number of marks carried by a question is indicated against it.*

*Answers must be written in **TAMIL** unless otherwise directed in the question.*

*Word limit in questions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks will be deducted.*

*Any page or portion of the page left blank in the answer book must be clearly struck off.*

---

**Q1. பின்வரும் ஒவ்வொன்று குறித்தும் 300 சொற்கள் அளவில் சிறுகட்டுரை வரைக.** *50×2=100*

(அ) நாம் செயல்களில் வாழ்கிறோம், ஆண்டுகளில் அல்ல. *50*

(ஆ) குறித்த காலத்தில் நீதி கிட்டாவிடில் எந்தச் சமுதாயமும் நிலைத்து நிற்க முடியாது. *50*

Q2. பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அந்த அடிப்படையில் அப்பகுதியின்கீழ் உள்ள வினாக்களுக்குத் தெளிவான, சரியான, சுருக்கமான மொழியில் விடைதருக. *10×6=60*

பத்திரிகையாளர்களிடையே கருத்தொற்றுமை இல்லாத நிலை நிருவாகிகளுக்கு வசதியான ஒரு சூழல் ஆகும். ஊடகத்தின் பன்முகக் குரல்களால் அதன் வலிமை நீர்த்துப் போய் விடுவதையே இது குறிக்கிறது. உரத்த குரலாகவும் இல்லாமல், அதன் குரல் சென்று சேரும் வாசகர் வட்டமும் பெரிய அளவிலும் இல்லாமல் இருப்பது செய்தித்தாளின் தாக்கம் குறித்த சரியான அளவைத் தருகிறது. செய்தித் தாள்களின் விற்பனையில் பெரிதும் சம்பாதிக்கிறவர்களுக்கோ அவற்றின் விற்பனையை வெற்றிகரமாகக் கட்டமைப்பவர்களுக்கோ ஊடகத்தின் வலிமை பிடிபடாமல் ஒரு மாயப் பொருளாக உள்ளது.

செய்தித் தாள்கள் தமது பலவீனத்தை உணர்ந்துள்ளன; பயனின்மையை எப்படிப் புகழ்வது என்பதையும் அவை அறிந்தே உள்ளன. இந்நிலையில் அச்செய்தித்தாளை வாங்கிப் பொதுமக்கள் விற்பனையைப் பெருக்கியுள்ளதே அவற்றுக்கான புகழ்மாலையாகத் திகழ்கிறது. இது மக்களிடையே பெருவெற்றி கண்ட திரைப்பத்திற்கு இணையானது ஆகும். திரைப்படத்தை தயாரித்து வெளியிடுவது தொடர்பான பன்முகத்தன்மைகளுக்கு ஏற்ப அப்படத்தின் பணத்தை ஈட்டும் ஆற்றல் வேறுபடுகிறது. ஒரு படத்தின் வசூல் வெற்றிக்கும் கலைநேர்த்தியின் முழுமைப்பாட்டுக்குக் கருவியாகும் அப்படத்தின் சிறப்புக்களுக்கும் தொடர்பில்லை. கலையைச் சிறந்த முறையில்

அனுபவிக்கத் தேவைப்படும் நுகர்ச்சித்தன்மை மக்கள் திரளிடம் காணப்படுவதில்லை. எண்ணிக்கையில் வலிமையற்ற, நுண்ணறிவுமிக்கவர்களிடையே இத்தகைய நுகர்ச்சித்தன்மை காணப்படுகிறது. இத்தகைய தன்மை பெற்ற நற்பேறு உடைய மிகச் சிலருடைய நுகர்ச்சித்தரத்திற்கும் இத்தகைய பயிற்சியின்றி நன்கு புரிந்து கொண்டு முழுமையாக நுகரமுடியாத மிகப் பலருக்கும் இடையே ஒரு போராட்டம் உள்ளது. மிகப்பலராக உள்ளவர்களை மேம்படுத்துவதே திரைப்படங்களைப் போன்று செய்தித்தாள்களுக்கும் கல்விக் குறிக்கோளாக இதயத்தில் இருத்தல் வேண்டும். இவ்விரண்டு துறைகளிலும் மேற்கொள்ள வேண்டிய முயற்சிகளும், கடந்து வாகைசூட வேண்டிய உணர்ச்சிகளும் ஒரே மாதிரியானவை ஆகும்.

(i) ஆசிரியர் ஒப்பிடும் இரண்டு யாவை ? *10*

(ii) பொது மக்களை முக்கியமாகக் கருதுகிற செய்தித் தாள்களைப் பொதுமக்கள் எப்படி எதிர்கொள்கின்றனர் ? *10*

(iii) ஆசிரியர் குறிப்பிடும் கருவி யாது ? *10*

(iv) ஆசிரியர் கருத்துப்படி, செய்தித் தாள்களின் குறிக்கோள் யாது ? *10*

(v) ஆசிரியரால் ஏற்கப்படாதவர்கள் யாவர் ? *10*

(vi) ஒரு செய்தித்தாளின் தரம்பற்றிய தவறான கருத்தை உருவாக்குவன எவை ? *10*

**Q3. கீழ்க் காணும் பகுதியை கவனமாகப் படித்து அதன் கருத்துச் சுருக்கத்தை மூன்றில் ஒரு பகுதியாக சுருக்கி எழுதுக. தலைப்பு வழங்க வேண்டுவதில்லை (குறித்த சொல் அளவிற்குள் எழுதாவிடில் மதிப்பெண்கள் குறைக்க அது வழிகோலும்).** *60*

'நாடு' என்பதற்கும் 'நாட்டரசு' என்பதற்கும் இடையே இன்றைய சமகால உலகில் கொள்கைக் குழப்பம் பரவலாக உள்ளது. 'நாட்டரசு' என்பது மற்றதை விட வரையறுக்க எளிதானதாகும்; உலக அரசியல் அமைப்பின் அடிப்படை அலகுகளான நாட்டரசுகள் அரசன் ஆளும் நாடுகளோடு அவை அடிக்கடி இனங்காணப்படுகின்றன; அவை 'Countries' என ஆங்கிலத்தில் பரவலாக அழைக்கப் படுகின்றன. அவற்றை நாம் எளிதாக அரசாங்கங்கள் எனக் குறிப்பது வசதியானதாகும். ஆனால் நாட்டரசு என்பதினும் சிறிய அலகுகளான மாநிலங்களைக் குறிக்க அது துரதிர்ஷடவசமாகப் பயன்படுத்தப்படுகிறது.

நாட்டரசு என்பதை அரசன் ஆளும் நாடான இராஜாங்கம் என்பதோடு இணையாகக் குறிக்கத் தோன்றுகிறது. எனினும் அது தவறான கருத்துக்கு அடிகோலும். ஏனெனில் அரசனாட்சி என்பது நவீன உலகில் திட்டவட்டமானதாகக் கூற முடியாத தன்மை கொண்டது. நடைமுறையில் எல்லா நாடுகளும் தமது அரசாண்மையை பன்னாட்டு அமைப்புக்களுக்குத் தாரை வார்த்துவிட்டன. மேலும், இந்த அமைப்புக்கள் - ஐ.நா. பொருத்தமான உதாரணம் இங்கு - தமது அதிகாரத்தைத் தமக்குக் கீழ் உள்ள அரசாங்கங்களிடமிருந்து பெற்றுள்ளனவே தவிர முறைமாறியல்ல. அரசுகளைப் பொறுத்தவரை அதிகார உறவுகள், உடன்பாடுகள், ஆகியவற்றில் சிக்கலான அமைப்பு உடையதாக அவை உள்ளன. ஒரு உச்ச நிலையில், குறிப்பிட்ட பெரிய நாடுகளுக்கு இவை பரவலான அதிகாரங்களைத்

தருகின்றன. வேறு ஒரு உச்ச நிலையில், பல சிறு சிறு நாடுகள் வலிமைவாய்ந்த அண்டைநாடுகளின் அல்லது பன்னாட்டு அமைப்புக்களின் பாதுகாப்பிலேயே இருப்பதால் அவை பல துறைகளில் சுதந்தரமாகச் செயல்பட முடியாத நிலையிலேயே உள்ளன.

பெரும்பாலான அரசுகள் தம்மை நாடுகள் என்றே குறிப்பிடுகின்றன. அவற்றின் புறமதிப்பைக் கணக்கில் கொண்டு நாட்டரசுகளையும் நாடுகளையும் ஒன்றாகவே கருதக்கூடாதா ? அதற்குச் சாத்தியமில்லை, வேறு வகையில் அவை நுண் வடிவங்களே. ஆதலால் நாட்டரசு என்பது சட்ட பூர்வமான வரையறை பெற்ற ஒன்று; நாடு என்பது மக்கள் கூட்டம். நவீன மக்கள் தொகுதிகள் தம்மை நாடு எனக் கருதிக் கொண்டாலும் நாட்டரசு என்னும் நிலையை எய்தவே அவை ஆசைப்படுகின்றன. ஆதலின் நாடு என்பது சிறியது; நாட்டரசு என்பது பெரியது. முந்தைய சோவியத் யூனியனில் இடம்பெற்ற ஜார்ஜியன்கள், லித்துவானியர்கள், உக்ரேனியர்கள் சுதந்திரம் அடைவதற்கு முன் நாடுகளாக இருந்தன என்பதைப் பெரும்பாலான விமரிசகர்கள் ஏற்றுக்கொள்வார்கள். அவ்வாறே ஸ்காட்லாந்து போன்ற வரையறுக்கப்பட்ட நிலப்பகுதிக்கு உட்பட்ட மக்கள் தொகுதியை நாட்டுத் தகுதி எய்தியவர்கள் என்றே ஏற்க வேண்டும் எனப் பெரும்பாலோர் கருதுவர். வேறு வகையில் சொல்வதானால், தன்னாட்சி ஆசை அல்லது சுதந்திரம் என்பதே நாடு என்பதற்குப் போதுமானது. இன்றைய நாட்டரசோடு மேலோட்டமாகப் பார்க்கும் போது ஒத்துள்ள ஆட்சி முறை அந்நாடுகளில் பண்டே இருந்துள்ளன. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்பே உலகின் சில பகுதிகளில், சீனா, இந்தியா, மத்தியதரைக்கடல் பகுதிகளில் இத்தகைய தொன்மையான ஆட்சிப்பகுதிகள் அறிவாற்றல் சான்றவர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்துவந்தன.

இவ்வகையான முற்கால ஆட்சி வளர்ந்து அல்லது பதிலீடு செய்யப்பட்டு நவீன நாட்டரசுகள் உருவாகியுள்ளன. இவ்வுருவாக்கம் மிகவும் மெல்லவே நிகழ்ந்தது. இவற்றின் வேர்கள் இன்றைய நாட்டரசுகளில் வலிமையாக உள்ளன. 1917/1918 வரை திகழ்ந்த ஆஸ்ட்ரோ - ஹங்கேரிய, ரஸ்ஸிய, ஒட்டோமன் பேரரசுகள் ஆகியவை அரச பாரம்பரியத்தில் அமைந்தவை. அவற்றின் மக்கள் தொகுதியிடையே பொதுவான, அனைவரும் பகிர்ந்து கொள்ளத்தக்க அடையாளம் இல்லை. 1991 வரை சோவியத் ஒன்றியத்தில் ரஸ்ஸியப் பேரரசின் பல்வேறு மரபுகளைக் கொண்டிருந்தது. அதற்குப் பின்னரே பல நாடுகளைக் கொண்ட ஒரு நாட்டரசாகச் சட்டபூர்வமாக உருவானது. இன்றுகூட நாட்டரசு என்பது நாடு என்பதும் ஒன்றோடு ஒன்று இயையாமல் உள்ளதற்குப்பல எடுத்துக் காட்டுக்களைத் தர முடியும். எல்லா நாட்டரசுகளின் அரசாங்கங்களும் தமது ஆட்சியை நாடுகள் எனக் கூறினாலும், அந்த அரசு அறிவித்துள்ள தேசிய அடையாளத்தை ஏற்காத மக்கள் தொகுதியைக் கொண்ட நாடுகள்பல இருக்கத்தான் செய்கின்றன. பிரிட்டனில் ஸ்காட்ஸ், வெல்ஷ் இனத்தில் பலரும் தம்மை ஸ்காட்ஸ் என்றோ வெல்ஷ் என்றோ கூறுவதையே விரும்புகின்றனர். பிரிட்டிஷ் நாடு அல்லது ஸ்காட்டிஷ் - பிரிட்டிஷ் அல்லது வெல்ஷ் - பிரிட்டிஷ் என்று தேசிய அளவில் கூறிக் கொள்வதை அவர்கள் விரும்புவதில்லை. அரபு நாடுகளில் பலரும் தம்மை அரபு நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றே கூறுகின்றனரே அன்றி, அரபுநாடுகளில் இடம்பெற்றுள்ள ஈராக் முதல் மொராக்கோ, தெற்கு யேமன் வரை பரவியுள்ள நாடுகளுள் ஒன்றைச் சேர்ந்தவர்களாக உணர்வதில்லை.

பலருக்கும் (நாடு - அல்லாத) இன அடையாளமே வலிமை மிக்கதாக உள்ளது. அவர்களுக்கு (நாடு -

மையப்பட்ட) தேசிய அடையாளம் என்பது பலவீனமானதும் முக்கியமற்றதும் ஆகும்; முதல் அமெரிக்க அல்லது ஆப்பிரிக்க இனக்குழுவின் (பழ ப்குரயின்ரின்) உறுப்பினர்கள் இவ்வகையினரே ஆவர்.

நாட்டரசும், நாடும் ஒன்றோடு அன்று ஒத்தவை அல்ல எனினும் அவை ஒன்றுக்கொன்று நெருக்கமானவை. அந்தோனி ஸ்மித் (குறிப்பாக, ஸ்மித் 1991 பார்க்க) நாடுகளைப் பின்வருமாறு வகைப்படுத்துகிறார். இனக்குழுக்களிலிருந்து முதன்மையாக வளர்ந்தவை, பெரும் மக்கள் தொகுதியோடு ஒட்டி ஒழுகும் பொருட்டுத் தமது இன அடையாளங்களை, மாற்றிக்கொண்டும் விரிவு படுத்திக் கொண்டும் அம்மக்கள் தொகுதிக்குள் ஐக்கியமானவை, முன்னர்ப் பலவாறாக வேறுபட்டுக்கிடந்த ஆட்சிப் பகுதிகளுக்குள் தம்மைப் பொதுத் தேசிய அடையாளத்தை நாடி ஒருங்கிணைத்துக் கொண்டவை.

(503 சொற்கள்)

Q4. **கீழ்க் காணும் பகுதியை தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.** *20*

Raman completed school when he was just eleven years old and spent two years studying in his father's college. When he was only thirteen years old, he went to Madras (which is now Chennai), to join the B.A. course at Presidency College. Besides being young for his class, Raman was also quite unimpressive in appearance and recalls, '... in the first English class that I attended, Professor E.H. Elliot addressing me, asked if I really belonged to the junior B.A. class, and I had to answer him in the affirmative.' He, however, stunned all the sceptics when he stood first in the B.A. examinations.

Seeing what a brilliant student he was, his teachers asked him to prepare for the Indian Civil Services (ICS) examination. It was a very prestigious examination and very rarely did non-Britishers get through it. Yet Raman had impressed his teachers so much that they urged him to take it up at such an early age. In spite of their student's brilliance, the plan was not to work. Raman had to undergo a medical examination before he could qualify to take the ICS test and the Civil Surgeon of Madras declared him medically unfit to travel to England ! This was the only examination that Raman failed, and he would later remark in his characteristic style about the man who disqualified him, 'I shall ever be grateful to this man,' but at that time, he simply put the attempt behind him and went on to study Physics.

Q5. பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக. *20*

ஒன்றை வாங்க உதவுவதாய், கைவிட்டுக் கைமாறுவதாய் உள்ள எதனையும் பணம் என்று வரையறுக்கலாம். இதன் பயன்பாடு, பண்டமாற்று முறையை அல்லது அவ்வாறு செலுத்தப்படும் ஒரு முறையைப் பதிலீடு செய்துள்ளது. மாற்றப்படும் பொருள்களின் மதிப்புக்களை இணையாக்குவதில் ஏற்படும் சிக்கல்களும் சிரமங்களும் மிக்க செயல்முறை, இரு சாராரும் ஒரு பண மாற்று செய்பவரின் முன்னிலையில் ஒருவர் சொல்வதை மற்றவர் ஏற்றல் என்னும் செயன்முறை கொண்ட நிலை மாறிப் பணமுறை நடைமுறைக்கு வந்துள்ளது. இதனால் பணத்தை மாற்றிக்கொள்ள வசதியாக உள்ளது. பணிப் பகிர் வுக்கும் பணியில் சிறப்புப் புலமை பெறவும் பணம் உதவுவதால் பேரளவில் உற்பத்தி பெருக அது உதவியுள்ளது. பணம் எப்பொருளில் வேண்டுமானாலும் அமையலாம். சட்டமோ சமுதாய வழக்கமோ ஆணையிட்டுள்ளவாறு அது எவ்வடிவில் வேண்மானாலும் அமையலாம். ஆனால, அதன்

இன்றியமையாத பண்பாக அது உடனடியாகவும் பரவலாகவும் ஏற்கப்படுவதாக இருப்பதுதான். பழங்குடிச் சமுதாயங்களில் கால்நடைகள், கிளிஞ்சல்கள், அரிசி, தேயிலை போன்ற பொருள்கள் பயன்படுத்தப்பட்டன. நவீன நாகரிகமடைந்த நாடுகளில் உலோகம் அல்லது தாள் பயன்படுத்தப்படுகிறது. இவை நாணயங்கள் அல்லது நோட்டுக்கள் வடிவில் அமைந்து, பணத்திற்குத் தேவையான விரும்பத்தக்க முதன்மைப் பண்புகளான எடுத்துச் செல்லல், நிலைத்திருத்தல், தரத்திலும் ஏற்பிலும் ஒத்த தன்மை உடையதாக இருத்தல் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. தங்கம், வெள்ளி, செம்பு, நிக்கல் முதலிய உலோகங்கள் முதன்மையாகப் பயன்படுத்தப்படுகின்றன. பல்வேறு முறைகளில் நோட்டுக்கள் வழங்கப்படுகின்றன.

Q6. (அ) **கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக.** *1×5=5*

(i) சூதுவாது *1*

(ii) ஒப்பனை *1*

(iii) ஏறத்தாழ *1*

(iv) கலகலவென *1*

(v) முறையான *1*

(ஆ) **கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.** *1×5=5*

(i) பன்னாடுகள் *1*

(ii) செந்தாமரை *1*

(iii) அருஞ்செயல் *1*

(iv) மனோவேகம் *1*

(v) மண்ணாங்கட்டி *1*

(இ) கீழ்க்காணும் சொற்களுக்கு எதிர்ச் சொற்களை எழுதுக. *1×5=5*

(i) புகழ்ச்சி *1*

(ii) முற்காலம் *1*

(iii) ஒற்றுமை *1*

(iv) மென்மை *1*

(v) செயற்கை *1*

(ஈ) கீழ்க்காணும் சொற்களை அகர வரிசையில் எழுதுக. *1×5=5*

(i) சங்கு, சக்கரம், சத்திரம், சந்தனம் *1*

(ii) மத்தளம், மந்தாரம், மட்டம், மகிமை *1*

(iii) வெல்லம், வெங்காயம், வெந்தயம், வெண்ணெய் *1*

(iv) கட்டம், கக்கம், கழகம், கவனம் *1*

(v) பட்டம், பக்கம், பண்ணை, பவழம் *1*

(உ) கீழ்க்காணும் சொற்களின் பிழைகளை நீக்கி எழுதுக. *1×5=5*

(i) கபாளம் *1*

(ii) கினறு *1*

(iii) சுவற்றில் *1*

(iv) மனக்கேனி *1*

(v) உறுவம் *1*

(ஊ) கீழ்க்காணும் சொற்களுக்கு இணையான பொருளை உடைய சொற்களை எழுதுக. *1×5=5*

(i) அகம் *1*

(ii) பூ *1*

(iii) புத்தகம் *1*

(iv) துடைப்பம் *1*

(v) சொல் *1*

(எ) கீழ்க்காணும் வாக்கியங்களை எதிர்மறையில் அமைத்து எழுதுக. *1×5=5*

(i) நேற்று நான் உன்னைப் பார்த்தேன். *1*

(ii) அவளைக் காண முடிந்தது. *1*

(iii) அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். *1*

(iv) நீ எப்போதும் வேலைசெய்கிறாய். *1*

(v) மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. *1*

(ஏ) கீழ்க்காணும் இரண்டனுள் ஒன்று குறித்து ஐந்து வாக்கியங்கள் எழுதுக. $2\frac{1}{2} \times 2=5$

(i) நூலகம் $2\frac{1}{2}$

(ii) உழைப்பு $2\frac{1}{2}$